திருவுத்தரகோசமங்கை

# களேசுவரி பிள்ளைத்தமிழ்.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY,
TIRUVANMIYUR, MADRAS-41.

வ. த. சுப்பிரமணிய பிள்ளை.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவுத்தரகோசமங்கை

# மங்களேசுவரி பிள்ளைத்தமிழ்.

இது

சென்னைக் கிறிஸ்தியன் காலெஜ்

தலைமைத்தமிழ்ப்பண்டிதர்

ரமஸ்ரீ. வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள், பி. ஏ.

பரிசோதித்தது.

வ. த. சுப்பிரமணியபிள்ளை அவர்கள்

சென்னைப்

பண்டித மித்திர யந்திர சாலையிற்

பதிப்பித்தது.

1901.

All Rights Reserved.

உ

கணபதி துணை.

சிவமயம்.

# திருஉத்தரகோசமங்கை

# மங்களேசுரி பிள்ளைத்தமிழ்.

## காப்பு. —129.

### நேரிசை வெண்பா. —106.

தேற்றுதமிழ் மங்கைவரு செல்விமங்க ளேசுரிமேற்
சாற்றுகின்ற பிள்ளைத் தமிழுக்கே—யூற்றருவி
மன்னமத கோசமத மற்றிலையொப் பென்னவந்த
கன்னமத கோசமதன் காப்பு.

அத்திமுகத் துத்தமனை
நித்தநினை சித்தமே.

## திருமால்.

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பூமேவு கமலப் பொகுட்டர சிருக்கையும்
பொற்கோயி லந்தணனுடன்
புவனபகி ரண்டகோ ளகையெலா முந்தியம்
போருகத் தேமலர்ந்து
தேமேவு தண்டுழாய் மாலையுந் திருவுமொரு
செம்மணியு மார்பணிந்த

செங்கண்முகில் மெய்யனைக் கையாழி யானைத்
தினம்பணிசெய் வாமலர்த்தார்
தாமேவு கொந்தளக பந்திச் சொருக்கணி
சமர்த்தியுந் தமிசிவபரா
சத்தியந் தரிகிரந் தரிபுரந் தரிதுரந்
தரிசவுந் தரிகல்யாணி
மாமேவு மூலவல்லி மலைவில்லி புணர்வல்லி
மங்கையம் பதிவல்லியை
மணிபூர கத்திலுறை மணியென்கண் மணிமன்றே
மணியினைக் காத்தருளவே. (க

## நடராஜர்.

சடையாட வெள்ளைமதி நிலவாட வொருகைதுடி
தானாட வாணுடுபூ
தலமாட வியர்வாட வெதிராடு சிவகாமி
தனைநாடி நகையாடவே
யிடையாடு புலியாடை யுடையாட வொருகர
மெடுத்தாடி மறுகரமெடுத்
தெதிர்வீசி யுடனாடி விளையாடி நடமாடு
மெங்கோன் பதம்பணிசெய்வாம்
மடைவாளை குதிபோட வருகோடி யொருகோடி
மடநாரை சருவென்னவே
வளைவீசு மணிகவ்வி மடைவாயில் முகைவிள்ளு
மலர்தோறு மனைவென்னவே
யடைசேர வளைமேவு பிரமா புரத்தில்வள
ரபிஷேக வல்லியைப்பெண்
அரசிமங் களவல்லி சிவயோக வல்லியம்
பிகைதனைக் காத்தருளவே. (௨)

## காப்புப்பருவம்.

### விநாயகர்.

வேறு.

சித்திர பாரத கதையைக் குறித்தொரு
சித்தம தாய்வட மலையிற் பொறித்திடும்
நித்த விநாயகன் முதன்மைத் தலத்தினை
நித்தமு மேபணி யடிமைத் தொழிற்செய்வாம்
வித்தக மாசிவ தலமெத் தலத்தினு
மெய்த்தல மாகிய பிரமத் தலத்துறை
பத்தர்கள் பூசைசெய் சிவசத் தியைச்சில
பத்தினி யானபெண் ணரசைப் புரக்கவே. (௧)

### முருகக்கடவுள்.

இந்தி ரன்பதி கொள்ளையிட் டாக்கமிக்
கெங்க ணுங்கிரி வல்லபச் சூர்க்கிளை
சிந்த வென்றிடும் வள்ளலைக் கார்த்திகை
செங்கை கொண்டணை பிள்ளையைப் போற்றுவாஞ்
சந்தி ரன்கிரி வில்லெனக் கோட்டிய
சங்க ரன்புணர் சையல்முத் தாய்ப்புவி
வந்தொ ரிந்திர வில்லெனத் தோற்றிய
மங்கை மங்கள வல்லியைக் காக்கவே. (௨)

### பிரமதேவர்.

வேறு.

துள்ளித் தரங்க மெடுத்தெறிந்து
தத்துந் திரைப்பாற் கடனடுவே
தலையா யிரம்பெற் றிடும்பாம்பு
தன்மேல் வலக்கைக் கீழ்க்கொடுத்து
வள்ளக் கமலச் செழுங்கே யில்
வளருந் திருவோ திமமார்பில்

வளரத் துயில்வான் பொன்னுந்தி
எந்த மலையைப் பணிசெய்வாங்
கள்ளப் பிறவிப் பெருங்கடலைக்
கடந்தார் மனத்தே கசிந்தூறிக்
கருது மூலப் பரநாதங்
கலந்த பரமானந்தவெள்ளம்
அள்ளிக் கொழிக்குந் திருநடைக்கண்
அமுதைப் பரிபூரணஞானந்தன்
அழியா விரத முடிக்கமங்கைக்
கரசைத் தினமும் புரக்கவென்றே.

தேவேந்திரன்.

வேறு.

அறுவரொடு திசை யிருவர் பணியவு
மரசு நிலைமைசெய் வள்ளலைப் பார்த்திபர்
அமரர் தலைவனு முலகில் முதல்வனு
மொருவனிவனென விள்ளநட் பாயுத்தினை
மறுகியுருவெரி சனியி னுருவவு
மடலக னெழுதவு மையலைச் சேர்க்கவும்
மகிமை நிறைகொலு வளருமகபதி
குலிச நிருபனை யுள்ளம்வைத் தேத்துவாம் உ)
எறியு நமன்விழ வுதைசெய் தொருவனை
யிரவி மதியமு முள்ளமட் டாக்கினை
யிவனு மெளியவன் முறியி லிவனையும்
விலைகொ டெழுகென ஐயனைக் கேட்டனை
யுறுதி படமுறி யெழுதி யடிமைகொ
ளுபப சதசள மெல்லடிப் பேட்டனம்
உமைவி ணவர்பணி பிரம புரநகர்
தழையு மரகத வல்லியைக் காக்கவே.

# காப்புப்பருவம்.

## திருமகள்.

தழுவு நகையெறி நிலவு மழகிய
குமரி வடிவது பொன்னிறம் பூத்தவள்
குதலை மொழிபழ கிரதி கணவனை
யருளி முலையமு தன்னையென் றூட்டினள்
மழலை யனையதன் முதல்வ னுரமிசை
மருவ யனுதின மின்னெனுங் காட்சியின்
வளரு மயிலினை யனச மலர்புகு
கிளியை யெனதிரு கண்ணிடம் போற்றுவாம்
எழுத வரிதெனு மறையின் முடிபொரு
ளிவளை யொருசிறு கன்னியென் றேத்தவும்
இளைய மசன்வரு பெரிய மகனெனு
மிருவ ரிவளெம தன்னையென் றார்க்கவும்
அழகு முழுகிய வமுத நிலவெறி
முழுவெண் மதியினை யன்னமென் பேட்டினை
அருளின் வடிவொடு பிரம புரமுறை
யரசு மயிலினை யென்னிடங் காக்கவே. (௭)

## நாமகள்.

வேறு.

வெள்ளித் தரளக் கதிர்த்தச்சன்
விரித்த மணிப்பீ டிகையமைத்த
வீதம்போல் மலர்த்தும் வெண்கமல
வீட்டுக் குடிபுக் கியன்மதுரந்
தெள்ளிக் கொழித்துக் கலைப்பாலைத்
தினமு மருந்தி முன்புதலைந்
மெய்தார் மணிநா விளையாடுந்
தெய்வக் குயிலை யஞ்சலிப்பாம்

கொள்ளத் தருமென் றிருமுலைப்பால்
குமரக் கடவுள் வயிறூட்டிக்
குளிர்நீ ராட்டித் தாலாட்டிச்
சுறங்கிற் கிடத்திக் கண்வளர்த்து
வள்ளிக் கொடிக்குக் கணவனென
வளர்த்தகருணைப் பெருவாழ்வை
மங்கை திருவுத் தரகோச
மங்கைக் கரசைப் புரக்கவென்றே.

## பத்திரகாளி.

### வேறு.

சுகனெற்மொழி பாலையைக் காத்தவள்
சுடருமுத்தலை வேலினைச் சேர்த்தவள்
அடல ரிப்பரி வேறுகைத் தார்த்தவள்
அமலை பத்திர காளியைப் போற்றுவாங்
கடக ரிக்கிளை யோனெனத் தோற்றிய
கருணை வெற்பினை நீர்குளிய பாட்டியே
மடியில் வைத்தர சேயெனப் போற்றிய
மயிலி னைப்புலி யூரினிற் காக்கவே.

## முப்பத்துமுக்கோடி தேவர்

### வேறு.

கன்னியரி லெழுவர்திசை காவலரி லெண்மர்
காதிபரி ராசிகளுடுக்
கணமட்ட வசுமருத் துக்களேந் தியகைக்
கபாலரை யிரவர்களெண்மர்
பன்னிரு கதிர்த்தலைவர் முதலாக விண்ணின்முப்
பத்துமுக் கோடிதேவர்

பாதசா மரைமலரை யாதரவி னலன்பு
பற்றிமன தொடுபரசுவா
மின்னின்றி முகிலில்லை மலரின்றி மணமில்லை
விதியின்றி மதியில்லைமுன்
வினையின்றி யுடலில்லை மணியின்றி யொளியில்லை
விளைவில்லை மழையின்றிநற்
பொன்னின்றி நகையில்லை யுனையின்றி யிலையண்ட
புவனங்க ளெனவேதமே
புகல்கின்ற திருமங்கை நகர்வந்த தலைவியைப்
பொன்னைப் புரக்கவென்றே. (௧0)

காப்புப்பருவம் முற்றும்.

---

## செங்கீரைப்பருவம்.

கங்கா சலத்தைநவ ரத்நகும் பம்பெய்து
கஸ்தூரி லேபனத்தைக்
கரைவிக்க மஞ்சனஞ் செய்துநெற் றிக்குவெண்
காப்பிட்டொர் சுட்டியிட்டு
மங்கா நிரஞ்சன விழிக்கஞ் சனத்தினை
வகுத்தெழுதி யாகமத்தின்
வ[illegible]கலை யுடுத்தினவ ரிவளென்று மேகலை
மருங்கினி லுடுத்திளையின்
சங்காழி கையிட்டு வயிடூரி யக்கதிர்
ததும்புங் குதம்பையிட்டுத்
தளையாடு காநக்த வளையாடு கொப்புமிரு
தாட்குச் சிலம்புமிட்டுச்

சிங்கார மிட்டுநெற் றூய்முத்த மிட்டமயில்
செங்கீரை யாடி யருளே
*தென்மங்கை நகர்வந்த தன்மங்கை வளர்மங்கை
செங்கீரை யாடியருளே.

அறுபிள்ளை யென்னவே சரவணப் பொய்கைதனி
லாறுவடி வாய்விளங்கி
யறுவர்முலை யமுதுணக் கண்டுகை யாலெடுத்
தாறுருவு மோருருவமாய்ப்
பெறுபிள்ளை யாய்ச்செய்த பிள்ளைதொட ரவுமுன்பு
பெற்றமக வேதொடரவும்
பிரமன்முத லானபகி ரண்டமெல் லாமெமைப்
பெற்றதிவ ளேயென்னவு
மறுபிள்ளை யெனவொரு மரப்பாவை கைக்கொண்டு
மணிவிரல் சுவைத்துநகை வாய்
வழியமுது சிற்றாடை மடிநனைய வெங்கோனு
மதிமுடி தூக்கியின்னுஞ்
சிறுபிள்ளை யோவென்ன நின்றவிளை யாடுமயில்
செங்கீரை யாடியருளே
தென்மங்கை நகர்வந்த தன்மங்கை வளர்மங்கை
செங்கீரை யாடியருளே.

முத்திக்கு வித்தென முளைத்ததொரு கொடியதில்
முளைத்தநகி லாண்டமென்றே
முறையிடப் பழமறைகள் மரகத நிலாக்கடலின்
மூழ்குதிரு மேனியணைவார்

---

* "தேகஞ் சிவந்தமுதல் பாகம் பசந்தகொடி செங்கீ
ராடி யருளே" எனவும் பிரதிபேதமுண்டு.

## செங்கீரைப்பருவம்.

தித்திக்கு மானந்த போகசா கரமடை
திறந்தொழுகு நயனவழகுஞ்
செஞ்சிலம் போலிடப் பஞ்சியூட் டியதிருச்
செஞ்சரண விந்தையழகும்
எத்திக்கு மடிசெறித் திடவார்த நின்கோல
இருவிழி யடங்காமையால்
என்செயக் கடவதென் றேயெண்ணி யெண்ணியெங்
கோனுன்ற னழகையெல்லாஞ்
சித்தத்தி லெழுதிவைத் தனுதினம் பார்க்குமயில்
செங்கீரை யாடியருளே
தென்மங்கை நகர்ந்து தன்மங்கை வளர்மங்கை
செங்கீரை யாடியருளே. (௧)

பூவில்வரு திசைமுகக் கடவுளா லுந்தேவர்
புயபலத் தாலுமிந்த்ரன்
போர்கொண்ட வச்சிரப் படையாலு மந்தகன்
பொருகால தண்டினாலுங்
காவலர் துழாய்முடிக் கண்ணியான் விடுசக்
கரப்படையி னாலுநீல
கண்டன்விடு சூலத்தி னாலுமொரு காலத்தி
னாலுமே சால்சாய்வுறா
மாவினொடு முடிகுலைய வெட்டுடல் பிளந்துதிர
மடமடத் தடிபெயர்க்க
[illegible]ழியப் பெருங்குருதி விரிசலைப் பேயுண்ண
வடிவேல் திரித்துநாங்கு
தேவசே னைபதி யொருத்தனை வளர்த்தமயில்
செங்கீரை யாடியருளே
தென்மங்கை நகர்ந்து தன்மங்கை வளர்மங்கை
செங்கீரை யாடி யருளே. (௨)

## மங்களேசுரி பிள்ளைத்தமிழ்.

கருதிமந் திரமாட விமயமந் தரமாடு
தொழிலறிந் தலகமாடச்
சொருகுழைந் தகிலாட வொருகைசெண் டலராடு
துரிசில்வண் டினமாடவே
பருதிமண் டலமாட வுதயசந் திரனோடு
பரவையெண் டிசையாடவே
பழகுமிந் திரலோகம் வளருமங் கையராட
பவுரிகொண் டேனாடவே
யிருகைசங் கொலியாட முருகுகங் கணமாட
எழுதருங் குமமாடவே
இசபரந் தருபாத வுபயபங் கயமாட
இறகுகொண் டையுமாடவே
திருகுசங் கிலியாட ஒநசரஞ் சிவகாமி
செங்கீரை யாடியருளே
தென்மங்கை நகர்வந்து தன்மங்கை வளர்மங்கை
செங்கீரை யாடியருளே. (ரு

### வேறு.

பருமணி வச்சிர முத்திய சுட்டி
பளீரென வின்றாடப்
பருசிலை கெண்டை மதன்சிலை வண்டொடு
பாய்தரு கண்ணாடக்
குருமணி பச்சிலை மரகத வொளிவிடு
கொடியென வடிவாடக்
தொடிசனி லுண்டொரு பவள மெனும்படி
குதலைசொல் வாயாட
இருமணி யச்சதன் முழுமணி செம்மணி
யெம்மணி யானாலும்

# செங்கீரைப்பருவம்.

என்னிரு கண்மணி தன்னி லெழுந்தரு
ளிய மணி போலிலை யான்
றருமணி யாக விருக்கு மேறுமணி
யாடுக செங்கீரை
அரிபிர மார்க்கருள் பிரம புரக்குயி
லாடுக செங்கீரை. (௬)

யந்தர திண்புய விந்தைபெ றுங்கிரி
மன்னவ னுந்தை யுனை
வம்மென மடியலி ருக்கவ ளைக்கு
மலர்க்கர மேயாடச்
சந்திர விம்ப முகவுறு வேர்வை
ததும்பி வழிந்தாடத்
தளதளெனத் தக டணிநவ ரத்ன
சரப்பணி மார்பாட
நொர்தன வொர்தன மென்று ருந்தி
நுடங்கிய கொடிபோல
நுணுகிடை யாடவு மணுவளை வாகிலு
நோக்க மறிந்தாட
அந்தர துந்துமி நின்றொலி யாடிட
ஆடுக செங்கீரை
அரிபிர மர்ச்சருள் பிரம புரக்குயி
லாடுக செங்கீரை. (௭)

துஞ்ச மெனும்படி நெஞ்சில் நினைந்தவர்
தங்கள் குணப்பெருமான்
சங்கர னுக்கிர வங்க மொழித்தொரு
சங்க மெடுத்தபிரான்
செஞ்சிலை கைப்பிடி தம்பி சுமித்திரை
சிங்க மடித்துவரச்

சீதை யெனுந்திரு மாதை வருந்துபு
தேடி முகர்குலையக்
கஞ்ச மலர்த்திரு மங்கை யிருப்பது
கண்டு பிடித்துடனே
காலனெனப்பொரு ராவண னைச்சிலை
கால்களை யப்பொருத
அஞ்சன வண்ண முகிற்கொரு தங்கைய
ளாடுக செங்கீரை
அரிபிர மர்க்கரன் பிரம புரக்குயி
லாடுக செங்கீரை.

வேறு.

துயிலிசை யொழிபயி லழகிய பசிய
குருந்தே தந்தாயக்
கொடுவினை தணிபவர் பணிசெய மலைவளர்
கொம்பே செய்பொதிற்
கயிலையி லிறையவ னிறைமகி வடிவு
கவர்ந்தாய் பைந்தாதைக்
கருமயி லெனமுகி லெனமதி யெனவொர்
கரும்பே யென்பார்தம்
மயலற வருந்தி யலதென வுணர்பவர்
வம்பே யென்பாவை
வறுமையு பெருபிற வியுமற வருள்செய
வல்லா யெல்லாமுன்
செயவென முதுமறை முறையிட வருபவள்
செங்கோ செங்கீரை
திருமலி புலிநகர் மருவுமோ ரிளமயில்
செங்கோ செங்கீரை. (௬)

பூம்மலை யாகவு மூர்மலை மார்பின்
முளைத்த தடாதகையாய்
முற்பொரு ளுக்கு முதற்பொரு ளாகிய
முக்கண ளோர்சயிலை
யம்மலை தன்னை வளைத்தம ராடி
யடற்சிலை யம்பொடுநீத்
தன்று கணைப்படை மெய்முனை தள்ளி
யடங்கலும் வென்றவளே
யிம்மலை யோகிர வுஞ்சம தாமலை
யெம்பிய ரைக்கொலுமென்
றிடிபட் டடிபட் டுடைபட் டுதிர்பட்
டிடவிட் டெறிசெவ்வேற்
செம்மலை யோடொரு கைம்மலை தந்தவள்
செங்கோ செங்கீரை
திருமலி புலிநகர் மருவுமொ ரிளமயில்
செங்கோ செங்கீரை. (௧௦)

செங்கீரைப்பருவம் முற்றும்

## தாலப்பருவம்.

தூர்க்கண் முழக்கும் பரிமுழக்குந்
தவத்தின் முழக்குந் தமிழ்முழக்குஞ்
சகலா கமத்தி னிசைமுழக்குஞ்
சதுர்வே தத்தின் பொருள்முழக்குங்
கார்க்கொந் தளக மடந்தையர்கங்
கணைத்தி றெறிகிண் கிணிமுழக்குங்

# மங்களேசுரி பிள்ளைத்தமிழ்.

கரும்பா லையிற்பால் வருமுழக்குங்
கலியா ணப்பே ரிகைமுழக்கும்
ஆர்க்கும் பிணைதுந் துமிமுழக்கு
பூணிச்சே சண்டிப் பெருமுழக்கு
மாறா முழக்கு மெனமென்றே
வயலிற் கிடந்த வலம்புரிச்சங்
கார்க்கு முழக்கும் பிரமபுரத்
தரசே தாலோ தாலேலோ
அழியா திருக்கு மிமயமலை
யமுதே தாலோ தாலேலோ. (க)

குடங்காண் புனம்பலசோடி
தழைக்கு மகிழ மொருசோடி
தருவித் தழைநா யிலைபோலத்
தாங்கும்பிரமாண் டங்கோடி
படங்காண் மகுட முடியனந்தன்
பருதி மதியெண் டிசையாளர்
பணிமால் வரைமந் தரமேரு
படரா நின்ற பருப்புதங்கள்
இடங்கா ணுலகம் பதினாலு
மிரந்தே பிரமன் முதற்றேவர்
எல்லா மிரக்குங் கற்பாந்தத்
தெழுமு சாந்தப் பெருவெள்ளத்
தடங்கா தெழும்பும் பிரமபுரத்
தரசே தாலோ தாலேலோ
அழியா திருக்கு மிமயமலை
யமுதே தாலோ தாலேலோ (உ)

## தாலப்பருவம்.

வையம் புவனம் பிரமாண்ட
மாயா முனிவர் பெரும்பசங்கள்
மலரோ னிருக்குங் கர்பாந்த
வாழ்க்கை யழியப் பரந்தெழுந்தே
தொய்யும் படிக்கே யூழியனற்
சுற்றி யெரிக்கப் பல்லுயிருந்
தோற்றத் தொடுங்குங் காலமதாய்த்
தூங்கும் பொழுதும் அஞ்சலெனக்
கையென் பதுசொண் டெலையணைத்துக்
காத்தான் மங்க ளோசனியன்
கருணை நயமென் றுணர்தக்
கண்ணீர் சிதறி யாயிரந்தோள்
ஐயன் வணங்கும் பிரமபுரத்
தரசே தாலோ தாலேலோ
அழியா திருக்கு மிமயமலை
யமுதே தாலோ தாலேலோ. (௧)

பூலைமேற் குதிக்குஞ் சுனைகுதித்து
மதிவெண் கலைமேற் குதித்தெழும்பி
மழைநீர் கிழியக் குதித்துவைகை
வந்து குதித்துப் பசுங்கமுகின்
குலைமேற் குதித்துச் செவ்விளநீர்
குலுங்கக் குதித்து மஞ்சள்வைத்த
குழிமேற் குதித்து வயற்சங்கங்
குழுறக் குதித்துக் கருமேதித்
தலைமேற் குதித்துத் திருநாட்சந்
தடிமேற் குதித்து மதகொளை
தனித்து மடவார் முலைக்கணிசந்
தனத்தைக் கரைக்கு மஞ்சனநீர்

அலைமேற் குதிக்கும் பிரமபுரத்
தரசே தாலோ தாலேலோ
அழியா திருக்கு மிமயமலை
யமுதே தாலோ தாலேலோ. (௮)

கூற்றோ டெதிர்க்குந் திருநயனக்
கொழுந்தண் களபச் செழுங்குரும்பைக்
கொங்கைக் குதலைச் செங்கனிவாய்க்
கோல மடவார் கைச்சவண்கல்
லெற்றோ டெதிர்க்குஞ் செவ்விளநீ
ரெல்லா முடைபட் டிடையிடைமொய்த்
திருக்குங் கதலிக் கனிவருக்கை
யீன்ற கனிமாங் கனிபிதிர்ந்த
சாற்றோ டெதிர்க்கும் பசுமடிப்பால்
தமிழ்ப்பால் கருப்பம் பால்கலந்தே
ததும்பித் திருப்பாற் கடல்போலத்
தரங்க மெறிந்து பெருகுவைகை
யாற்றோ டெதிர்க்கும் பிரமபுரத்
தரசே தாலோ தாலேலோ
அழியா திருக்கு மிமயமலை
யமுதே தாலோ தாலேலோ. (௯)

வேறு.

பொய்வைத் திடுமுழு வஞ்சகநெஞ்சர்
புலைத்தொழில் கற்றோர்கள்
பூசனை செய்துப தேச முறுந்துறை
புன்மைத் துறையெனவே
மைவைத் திடுகுழல் வஞ்சக வஞ்சியர்
மாயையின் மூழ்குதுறை

வன்மத் துறையிது தன்மத் துறையவ
மலினத் துறையெனவே
தெய்வத் துறைபல சமயத் துறையிது
சின்னத் துறையெனவே
திருமகள் கணவனு மறியா தெழுசிவ
மான பெருங்கடலிற்
சைவத்துறையில் விளைந்திடு முத்தே
தாலோ தாலேலோ
சந்தத மங்கையில் வந்த பசுங்கொடி
தாலோ தாலேலோ. (௬)

அங்க முழக்கி விழுந்து துரோபதை
யன்றமு தாளையணைத்
தார மலர்க்குழல் வாரி முடித்தழு
காரமு டிப்பனெனச்
சிங்க முழக்க மறந்தனை யேது
திரும்பெதிர் வில்விசையா
சிந்து மகீபதி வந்தவ னைத்தலை
சிந்தென வென்றருளி
யெங்கு முழக்கிய வீம சுயோதன
ரென்பவர் போர்செயவே
யிடைவிட் டடிபட் டொடியத் தொடைதட்
டியகிட் டினனுகிச்
சங்க முழக்கிய செங்கண் முகிற்கொரு
தங்காய் தாலேலோ
சந்தத மங்கையில் வந்த பசுங்கொடி
தாலோ தாலேலோ. (எ)

திருவைப் பணிகொடு கலைகற் றறியொரு
திருவைத் தமிழ்கொடுமே

செகமுற் றினுமுயிர் விளைவித் திடுமொரு
சிறுவித் தெனும்வடிவாய்க்
கருவைக் கடலிடை முழுகிக் குதிபெறு
கயலுக் கிணையெனவே
கமலத் தொகேட லமுதத் தொடுபிணை
கதறச் சிதறியுமே
இருளிற் பெருகிய மலினத் துயர்விளை
யெழுமைக் கடல்பெருகி
யெனைமுற் றிலும்விலை யெழுதிப் பழவினை
யிடறிச் சிவனையுமே
சருவிக் குழைவழி தருவிப் பொருவிழி
தாலோ தாலேலோ
சந்தத மங்கையில் வந்த பசுங்கொடி
தாலோ தாலேலோ. (அ)

எந்திர மாகிய பொய்புடல்மெய்யுட
லென்ன வளர்க்கவுமே
யின்பம தாயமு துண்டு நிலைத்திட
வெண்ணிய புண்ணியர்கள்
புந்தியில் வாயுவை ரேசக கும்பக
பூரக மோடவிப்
பொன்னிற வண்டுக ளூத மலர்ந்திடு
பூவின மாமெனவே
மந்திர மாகிய குண்டலி சத்தி
மலர்ந்திட வெங்கனலால்
வம்மென நாதம் விளைந்த தலத்திடை
வந்தமிர் தம்பொழியச்
சந்திர னூக நிறைந்து வளர்ந்தவள்
தாலோ தாலேலோ

சந்தத மங்கையில் வந்த பசுங்கொடி
தாலோ தாலேலோ. (௯)

பைங்கர முந்திய சந்திர னக்கினி
பன்னிரு செங்கதிர்கள்
பன்னகர் விஞ்சையர் சித்த ரியக்கர்கள்
பண்ணவர் விண்ணவர்கள்
செங்கர முந்திய வெங்குலி சங்கொடு
திண்கிரி வென்றருளுந்
தேவர் பிரானழி யாமுனி வோர்துதி
நான்முக னாதியுயிர்
ஐங்கர னுங்குக னுந்திரு மைந்தனு
மச்சுத னுங்கடலு
மண்ட மகண்ட மெழும் புவனங்க
ளடங்கலு மேவளரச்
சங்கரர் பங்கி லிருந்திடு பத்தினி
தாலோ தாலேலோ
சந்தத மங்கையில் வந்தபசுங்கொடி
தாலோ தாலேலோ. (௧௦)

தாலப்பருவம் முற்றும்.

---

## சப்பாணிப்பருவம்.

ஒப்பாணி கொட்டித் தெரிந்திடு பசுந்தங்க
மொளிவிடுவ தென்ன நின்றே
ஒளிவிடுந் திருமங்கை நின்னழகு கண்டுகண்
டுளமுருகி விழிகுளிரவுஞ்

செப்பாணி கொட்டித் தெரிந்துதுலை நட்டநிற்
சித்திரக் கண்ண தாகுந்
திருமுலை சுமந்திடு கலைக்கொடியின் மதுரவாய்த்
தெளிகுதலை யரிய வள்ளைக்
கொப்பாணி கொட்டமலர் வாரிவிண் ணவரெலாங்
கொட்டநின் முகத்து வட்டங்
குறுவேர்வை கொட்டநீ கொட்டுவது கண்டிளங்
குமரனொடு கூடியங்கு
சப்பாணி கொட்டவிச யப்பாவை யொப்பாய்கை
சப்பாணி கொட்டியருளே
சந்ததந் திருமங்கை வந்தமங் களமங்கை
சப்பாணி கொட்டியருளே. (௧)

மலைவளைத் திடுமங்க ளேசனை யெனக்கொரு
மறைப்பொரு ளுரைத்தி யென்ன
மங்கையர்க் கரசிநீ மறவாது கேளென்று
வசனிக்க வுரைமறந்தே
கலைவளைத் திடுபொருளை யின்னமொரு விசைசொலக்
கடவதென் றிடலுமெங்கோன்
கண்மலர் சிவந்துநீ பரதர்மக ளாகவே
கடவையென் றலுமுனிந்தே
முலைவளைத் தமுதுண்ட வாய்மலர் துடித்தையன்
முன்வைத்த புத்தகத்தை
முன்கிழித் தெறியவுமென் முத்தைய னுமென்று
முருகனெனு மிளையமகனைத்
தலைவளைத் தேமுத்த மிட்டபெரு மாட்டியொரு
சப்பாணி கொட்டியருளே
சந்ததந் திருமங்கை வந்தமங் களமங்கை
சப்பாணி கொட்டியருளே. (௨)

## சப்பாணிப்பருவம்.

பாங்கான மதுரத்தை வடிகட்டி விலையிட்ட
படிகற்ற தமிழ்முற்றுமே
பாசண்டி யீயாத லோபியர்கள் காதெனும்
பருமரத் தொளையி னூற்றிச்
சாங்காலம் வருமென்ப தறிவின்றி மாயச்
சழக்கினில் வழக்கமாகிச்
சஞ்சலப் படுவேனை யஞ்சாம லுயிர்கொளத்
தக்கதென் றேயெழும்பி
யாங்கார முனைகொண்டு காலன்வெம் பாசத்தி
னுலகப் படவளைத்திட்
டக்ரமித் துக்ரமுற் றுக்கடித் துப்பிடித்
தப்புறத் தெற்ற விவனுற்
றுங்கா தெனச்சொல்லி தாங்குமர கதவல்லி
சப்பாணி கொட்டி யருளே
சந்ததந் திருமங்கை வந்தமங் களமங்கை
சப்பாணி கொட்டி யருளே. (௧)

பட்டணியு நுண்ணிடை நுடங்கப் புடைத்துப்
பணைத்துப் பெருத்த கொங்கைப்
பாரதிதன் விழியெழுது மையும் புலோமசைப்
பாவையணி திருமஞ்சளு
மட்டவிரி கமலப் பொகுட்டர சிருக்கைவளர்
மங்கைகுழ லணிதண்டுழாய்
மாலையுங் குடிவாங்கு முன்னமே பன்னிருகை
வடிவே றிரித்து வாங்கக்
கட்டிமணி யெனவுமொரு சரவணப் பொய்கையிற்
கண்டெடுத் தேயணைத்துக்
கந்தவே ளென்றுநீ ராட்டிமுலை யூட்டியொரு
கையான் மணிக்குறங்கு

தட்டியிரு தொடைமீது கண்வளர்க் குஞ்செவிலி
சப்பாணி கொட்டி யருளே
சந்ததந் திருமங்கை வந்தமங் களமங்கை
சப்பாணி கொட்டி யருளே. (ச)

செங்கதிர் மதிக்கடவுள் விஞ்சைய ரியக்கர்கந்
திருவர்துரு வன்குபேரன்
திசைவருண னங்கியிந் திரனிருதி யழியாத
சித்தர்சிவ யோகமுனிவர்
பங்கயன் புவனபகி ரண்டபிண் டங்கள்பல
வாய்விரிந் திடுசாகரம்
பற்பல விதத்திறு லுற்பவித் துந்தியின்
பதுமநா ளத்தின் மலரப்
பொங்குவெங் கடலிற் சகத்திர பணுடவிப்
பொற்புயங் கத்தின்மீதே
புருடோத்த மப்படிவ மேவிநீ துயில்கின்ற
பொழுதே பிடித்தழுந்திச்
சங்குசக் கரரேகை தங்குமிரு கைகளாற்
சப்பாணி கொட்டியருளே
சந்ததந் திருமங்கை வந்தமங் களமங்கை
சப்பாணி கொட்டி யருளே. (ரு)

வேறு.

வம்பணி கொங்கை மடந்தையர் செங்கை
மலர்ந்தெதிர் கொட்டவுமே
மந்திர மாதென விந்திரலோக
மகிழ்ந்தவர் கொட்டவுமே
செம்பவ ளத்கனி யுங்கனி வாய்மலர்
தேன்மொழி கொட்டவுமே

## சப்பாணிப்பருவம்.

சித்திர மாக வளைந்திட வுந்திரு
மேனி குலுங்கவுமே
யம்புய னூந்திரு வுந்தி மலர்ந்திடு
மம்புவி யும்பலவா
மண்டமு மெண்டிசை யுங்கட லுநதனி
யாலிடை சூல்கொடுமோர்
கொம்பி விருந்து குலுங்கு தெனும்படி
கொட்டுக சப்பாணி
குடவயி றுளதலை மகனை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (௬)

கனிகனி யக்கனி யுஞ்சுவை போலியல்
கற்றத மிழ்ப்புலவோர்
கண்மணி விண்மணி பெண்மணி யென்று
கசிந்துரை யோவியமே
பனிவரை யுச்சியில் விளைதரு மொவ்வொரு
பச்சையெ னும்படியே
பலபுவ னங்களு மகிலமும் வந்து
பணிந்திட நின்றவளே
தனியம ராடிய முப்புர வாதிகள்
தம்முனை சிந்தியுமே
தலைகுனி யத்திரு முகில்குனி யத்தட
வரைகுனி யப்புருவங்
குனிய வளைத்த சமர்த்தன் மணந்தவள்
கொட்டுக சப்பாணி
குடவயி றுளதலை மகனை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (எ)

எண்டிசை யுஞ்செடி சுற்று கொடித்திர
ளென்னவு மேபலவா

யிடையிடை நாடி யதிற்றச நாடி
யிருப்பதி னொடியுமே
னுண்டெனு முக்கலை யிருகலை நடுவணை
யொருகலை சுழுமுனையா
யோடிய நாடி யபான பிராணனை
யுங்கென வேகொருவி
மண்டி யெழும்பிய வெங்கன லோர்மவு
னப்பத மேபெறவே
மண்டல மிட்டொரு நாகமெ னும்படி
வால்வளை யத்துடனே
குண்டலி சத்தி யதாகி யிருந்தவள்
கொட்டுக சப்பாணி
குடவயி றுளதலை மகனை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (அ)

சங்கம தாகிய காயிலை தின்றுலர்
சருகுக ளேயுண்டுந்
தத்துவ மானதெ லாமுறை கண்டு
சமாதியி லேநின்றுங்
கங்கு லுடன்பக லேயிலை யென்ற
கருத்தை யிருத்தியுமே
கைதவம் விட்டொரு செய்தவ முற்றிய
காவல ராமடியார்
பொங்கிய செந்தமி ழாகிய தேனொடு
புத்தமு தம்பனிநீர்
புளகித் திளகப் பளிதக் களபப்
புழுகிற் குளிர்விக்குங்
குங்கும சந்தன லேபன சுந்தரி
கொட்டுக சப்பாணி

குடவயி றுளதலை மகனை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (௯)

பூவினு மெல்லிய மங்கையர் கண்மலர்
பொத்திய மேனியினும்
பொன்னந் துகிலொ டடுக்கிய பாவை
பொருந்துக மடிவைத்தும்
ஏவிய மங்கைய ரேவல்கள் செய்தபின்
னேவல் செலுத்தியுமே
யெத்தனை யோவிளை யாடல்செய் தாலு
மிளைப்பது தானின்றி
வாவியின் மூழ்கிய மாமலர் கொய்து
மணற்சிறு வீடுசெய்து
மந்திர கீதமெ னும்படி வாய்மல
ரப்பனி மால்வளையைக்
கூவிய மேவிளை யாடிய பெண்பிளை
கொட்டுக சப்பாணி
குடவயி றுளதலை மகனை வளர்த்தவள்
கொட்டுக சப்பாணி. (௧௦)

சப்பாணிப்பருவம் முற்றும். — ௰௧

---

## முத்தப்பருவம். — ௰௨

கைச்சா லடிக்கப் படுவதென்னக்
கடைவாய் திறந்த செங்நாரை
கால்கண் டொதுங்கிப் பஞ்சிலைமீன்
கமலப்பசுந் தே னொளித்ததெனப்

பைச்சா லடிகொண் டெழும்புமுதற்
பள்ளச் சிறுகன் னியர்கடைக்கண்
பார்வை நிழலைக் கைதடவிப்
பார்க்கும் வயலி லேர்ப்பூட்டி
யெச்சா லடிக்கு மடங்காத
வெருமைக் கருங்கால் வளையிடறி
யெச்சா லடிக்குங் கரும்புவளர்த்
தெடுக்கும் படிக்கே யுழவரெலாம்
மூச்சா லடிக்கும் பிரமபுர
முத்தே முத்தந் தருகவே
முத்தர் பணியுஞ் சிவசமய
முத்தே முத்தந் தருகவே. (க)

தத்திப் படருங் கொடிபோலத்
தசநா டியின்முக் குணநாடி
தனைக்கண் டெழுப்பிக் காலாட்டிச்
சாதித் திருக்குந் தாரணையிற்
சுத்தத் தலமா மூன்றுவகைத்
துரியங் கடந்த பரநாதத்
துவாத சாந்தப் பெருவெளியிற்
சுருதி முடிந்த மவுனத்தில்
தித்தித் தெழும்பு மானந்தத்
தேனு நீயாய்த் தேனையுண்டு
தெவிட்டு வாளு நீயாகத்
தெவிட்டத் தெவிட்ட வசமாகி
முத்திப் பொருளு நீயான
முதலே முத்தந் தருகவே
முத்தர் பணியுஞ் சிவசமய
முத்தே முத்தந் தருகவே. (உ)

சித்தே சித்தி யானந்தத்
தேனே தேனில் வடித்தெடுத்த
தெளிவே தெளிவைத் தெரியாசிற்
றறிவுக் கடங்காப் பேரறிவின்
வித்தே வித்தொன் றில்லாத
விளைவே துரியங் கடந்தவெட்ட
வெளியிற் கருவூ லப்பொருளாய்
விந்து நாதங் கலந்து நின்றே
யெத்தே வருக்கு மெப்பொருட்கு
மெந்தத் தொழிற்கு மெவ்வுயிர்க்கும்
இகசா தனைக்கும் பரகதிக்கு
மெல்லா விதிக்குங் கதிபடைத்த
முத்தே வருக்கும் வித்தான
முதலே முத்தந் தருகவே
முத்தர் பணியுஞ் சிவசமய
முத்தே முத்தந் தருகவே. (௩)

அழகு மணக்குந் திருமேனி
யலங்கல் மணக்கும் பூங்கூந்தல்
அகத்தா மரைவைத் திரவுபக
லன்பு மணக்கும் பழவடியா
ரிளகி மணக்கு நின்கீர்த்தி
யெழுதி மணக்கும் பாமாலை
யென்றுந் திரிப்பார் தவங்களுக்கே
யிரங்குங் கருணைப் பொற்பாவாய்
பழகி மணக்குஞ் செஞ்சாந்தும்
பச்சைப் புழுகுங் குங்குமமும்
பனிநீர்ப் பெருக்குங் கத்தூரிப்
பனிதக் குழம்பு மலர்த்தாது

முழுகி மணக்குங் கருப்பூர
முலையாய் முத்தந் தருகவே
முத்தர் பணியுஞ் சிவசமய
முத்தே முத்தந் தருகவே. (௪)

மத்த கெசத்தில் வருமுத்து
மழைமுத் தமுஞ்செந் நெலின்முத்தும்
வளைமுத் தமுங்கன் னலின்முத்தும்
வளருங் கமுகு சொரிமுத்துந்
தத்துங் கயலின் றலைமுத்துந்
தழைக்கும் பசிய கழைமுத்துந்
தண்டா மரைப்பூச் சொரிமுத்துஞ்
சற்றும் விரும்பேன் கைந்நிறைய
நித்த மெனக்குக் கொடுத்தாலு
நினையேன் புனையேன் வாங்கவுங்கை
நீளேன் கசடு களங்கமென்றே
நெடிது விலைப்பட் டெழுமிந்த
முத்த மெனக்குச் செங்கனிவாய்
முத்தே முத்தந் தருகவே
முத்தர் பணியுஞ் சிவசமய
முத்தே முத்தந் தருகவே. (௫)

அகங்கொண் டெழுதா மறைநாளத்
தகிலம் புவனம் பலகோடி
யரும்பிப் பலவாய் விரிந்துவிரிந்
தலரும் படியே காட்டிமற்றுஞ்
செகங்கொண் டுதரந் தனிலடக்கித்
திருப்பி யுமிழுந் தண்பவளச்
செவ்வாய்க் கருமா மலைமேனிச்
செங்கண் முகிலுக் கிளையாளே

யிகங்கொண் டெழுமோர் கொம்பானை
　　யெதிர்பார்த் திருந்து மத்தகங்கொண்
　டிடித்து முழக்கிப் பால்குடிக்க
　　இருகொம் பானை மேல்விழுந்து
முகங்கொண் டுழுது பால்குடிக்கு
　　முலையாய் முத்தந் தருகவே
　முத்தர் பணியுஞ் சிவசமய
　　முத்தே முத்தந் தருகவே. (௬)

தேன்றான் றளிக்குங் குதலைமொழித்
　　திருவே யிமயா சலம்பிறந்த
　தேனே வறிஞர்க் கிரங்குசிந்தா
　　மணியே யெனது கண்மணியே
வான்றான் முதலா கியபூத
　　வகையாய் மனமாய்க் கரணமதாய்
　வழங்கு முயிராய்ச் சுருதிமுடி
　　மவுனப் பொருளா யெவற்றினுக்குந்
தோன்றாத் துணையாய்ப் பலசமையத்
　　தொழும்பர் தமக்கும் பலவகையாய்த்
　தொல்லோர் தமக்கு மெல்லோர்க்குந்
　　தொழுது விரும்ப விண்முகட்டில்
மூன்றாம் பிறைபோல் முளைத்தெழுந்த
　　முதலே முத்தந் தருகவே
　முத்தர் பணியும் சிவசமய
　　முத்தே முத்தந் தருகவே. (௭)

வில்லை யரும்பு வாளிதொட்டு
　　வெம்போர் விளைத்து நீறாகி
　விழுந்தோ னெழுந்து திரும்பிவர
　　விண்ணாட் டரசு தழைத்தோங்க

தொல்லை யரும்பு மறைநான்குஞ்
சொன்ன தருமங் கூத்தாடச்
சூர்மாண் டழியப் பன்னிருகைத்
தோன்றல் பிறக்க மணம்புரிநாள்
செல்லை யரும்பும் பூங்குழலாள்
திருமங் கிலியப் பெருங்கூழைத்
திமிர வாரி யெம்பெருமான்
றிருமா முகம்விட் டெறிந்தநகை
முல்லை யரும்பு பூத்தசெவ்வாய்
முத்தே முத்தந் தருகவே
முத்தர் பணியுஞ் சிவசமய
முத்தே முத்தந் தருகவே. (அ)

வேறு.

கத்தி பிடித்தவர் சக்கரம் விட்டெறி
கக்கிச விர்த்தியினர்
கைச்சிலை முற்குனி யப்புரு வக்கடை
காவெனு வுக்கிரமா
வெத்திசை யெக்கிரி யெக்கட லெப்புற
மெத்தல முள்ளதெலா
மெட்கடை விட்டிவர் பக்கம தெத்தவ
ரெய்ப்பிலர் சுற்றவுமே
சத்த முழக்க மிகுத்து மதத்தெதிர்
தத்தி விழப்பொருசூர்
தத்தழி யச்செயல் கெட்டழி யப்படை
தட்டழி யப்பொருத
முத்தைய னைத்தரு பத்தினி யுத்தமி
முத்த மளித்தருளே

முப்பொரு ளுக்கு முதற்பொரு ளானவள்
முத்த மளித்தருளே. (௯)

பச்சை வடத்தினி னித்திரை யுற்ற
பரப்ரம முத்தனையும்
பத்ம தளத்தி லிருக்கு மறைப்படி
வத்த வொருத்தனுடன்
பிச்சை யளித்த தவத்தினி யேற்கொரு
பிச்சை யளித்தவனைப்
பெற்றரு ளிப்புவ னத்தி லுயிர்த்தொகை
பெற்று வளர்த்தருளிக்
கச்சில மைத்த கனத்த தனத்தி
கறுத்த நிறத்திவினைக்
கற்பனை யற்றவ ருற்பன முற்றவள்
கற்பக மொப்பெனவே
மூச்சக மெச்சிய பச்சை மடக்கிளி
முத்த மளித்தருளே
முப்பொரு ளுக்கு முதற்பொரு ளானவள்
முத்த மளித்தருளே. (௧௦)

முத்தப்பருவம் முற்றும்

---

## வருகைப்பருவம்.

பிடியே வருக பூரணத்தின்
பெருக்கே வருக மரகதத்தின்
பிரிவே வருக இமயமலைப்
பெண்ணே வருக மலைசுமந்த

கொடியே வருக கொடிவளர்க்குங்
கொம்பே வருக ஆநந்தகுணக்
குன்றே வருக கொழுத்தநிலாக்
கொழுந்தே வருக வுபநிடத
முடிவே வருக கட்டாணி
முத்தே வருக வித்தில்லா
முளையே வருக விளைநிலத்தை
முழுதும் விழுங்கி வெளியான
வடிவே வருக என்னிருகண்
மணியே வருக மயில்வருக
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே. (க)

ஊனே கலந்த முக்குணமே
யுயிரே வருக வுயிர்நடத்தும்
உணர்வே வருக பெருமுனிவ
ருபய கலைத்தா ரணைக்கெழும்புந்
தேனே வருக தேவேந்த்ர
சிந்தா மணியே வருகமலர்ச்
செந்தா துதிர்க்கும் பைங்கூந்தற்
றிருவே வருக கற்பகத்தின்
கானே வருக மழலைமொழிக்
கரும்பே வருக நான்பெற்ற
கன்றே வருக வுலகீன்றுங்
கன்னி யழியாப் பெண்வருக
மானே வருக வுயிர்பிழைக்கு
மருந்தே வருக மயில்வருக
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே, (உ)

# வருகைப்பருவம்.

துளநாட் டியபங் கேருகமுந்
தத்துந் திருப்பாற் கடலிடமுந்
தயங்குங் கயிலைப் பெருங்கிரியுஞ்
சதுர்மா மறையு மல்லாதென்
உளநாட் டியநின் சரணமெடுத்
தோடி வருக கிண்கிணிநின்
றேல முழக்கும் படிவருக
உண்ணா முலைப்பெண் மயில்வருக
களநாட் டியவெண் பிறைக்கோட்டுக்
கவர்வா யகப்பட் டுடைந்தசெந்தேன்
கடல்போற் பொங்கச் சிலைவேடர்
கால்கண் டொதுக்கித் தினைவளர்க்கும்
வளநாட் டிமய மலையரையன்
மகளே வருக வருகவே
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே. (௧)

பொழியுந் தரங்க மெடுத்தெறிந்து
பொங்குந் திருப்பாற் கடனடுவே
புகுமா றியற்றித் தென்பாலிற்
பொருந்து நுகத்தில் வடபாலிற்
கழியும் பொருந்தும் பொருந்தாது
கர்ப்பப் பிணியின் வசத்தாலே
கல்லாய்ப் புல்லாய்ப் பிறந்திளைக்குங்
கடலைக் கடந்து மாநுடமா
யெளியேன் பிறக்கும் பெருந்தீட்டு
மிறக்கும் பொழுது வருந்தீட்டும்
யமன்பாழ் நரகில் விழுந்தீட்டு
மெல்லாத் தீட்டுங் கழித்திடக்கண்

வழியுங் கருணை நீராட்டி
வளர்க்குஞ் செவிலித் தாய்வருக
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே. (௪)

சிவனைப் பொருது முடிசூட்டுந்
திக்கு விசயப் பெண்வருக
செங்கோல் செலுத்திப் புவியாண்ட
தென்னன் குலத்து மணிவருக
யவனப் பிடியே வருகவுல
கெல்லாம் பெற்ற தாய்வருக
இன்ன மெழுதத் திருந்தாம
லிருக்குங் குதலைக் கிளிவருக
கவனத் துடனே தவம்புரிந்து
கற்ப காலங் கசிவார்க்குக்
காலங் கடந்த மூலவெளிக்
கருவூ லத்தைக் கைகாட்டும்
மவுனச் சிறுபெண் பிள்ளைவருக
மணியே வருக மயில்வருக
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே. (௫)

கலைமேல் முளைத்த மருந்துபய
கலைமேல் விளைத்துத் தானருந்தி
கற்ப காலந் தானிருந்துங்
காய மிறந்தார் சிலபேர்கள்
இலைமேல் முளைத்த மருந்துபொடித்
தெடுத்து வடித்துத் தானருந்தி
யிறந்தார் சிலபேர் சருகருந்தி
யிறந்தார் சிலபேர் பாலாழி (௨)

## வருகைப்பருவம்.

அலைமேல் முளைத்த மருந்துகுடித்
தழிந்தார் சிலபேர் நம்மடியார்
அழிந்தா லழகு தானலவென்
றவர்தான் பிழைக்கும் படியிமய
மலைமேல் முளைத்து வளர்ந்ததனி
மருந்தே வருக வருகவே
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே. (௬)

தழையா யிலையாய்க் காய்கனியாய்த்
தழைக்கும் புவனம் பலகோடி
தானீன் றருளுங் கற்பகப்பூந்
தருவே துரியத் தலத்தினிலே
விளைவா யெழுந்த கருப்பூர
விளக்கே துளக்க மில்லாத
வெளியே மவுன பீடிகைமேல்
விளங்குங் கடவுள் மாமணியே
களையா தெழுமா ணவக்களையைக்
கடிந்தே யுணர்வி னீர்பாய்ச்சிக்
கசிந்து வளர்ப்பா ருயிர்ப்பயிர்கள்
கருகி முகம்வா டாமலந்தி
மழைபோல் வந்து கைகொடுக்கு
மயிலே வருக வருகவே
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே. (௭)

பதியாய்ப் பசுவாய்ப் பாசமதாய்ப்
பஞ்ச பூதந் தானாகிப்
பஞ்ச கரணப் பவுதிகமாய்ப்
படைக்கும் புவனப் பரப்பாகி

விதியாய் விதிக்குந் தனுகரண
விளைவாய் விளைவுக் கடங்காத
வித்தாய் வித்திற் கலந்தபொறி
வீதமாய் விளங்கிச் சதுர்வேதத்
துதியாய்த் தமிழாய்த் தமிழ்கனிந்த
சுவையா யியற்கைப் பரிமளத்தேன்
றுளிக்கு மொழியாய் ஒருத்தர்விலை
தொகுத்தே யின்ன படியெனவே
மதியா மணிப்பெட் டகமேபெண்
மணியே வருக வருகவே
வளருந் திருவுத் தரகோச
மங்கைக் கரசே வருகவே. (அ)

வேறு.

மயில்வருங் குமரேசர் முதருகு ருரங்கிழிய
வடிவேல் சினத்துவாங்கி
மலையாது விண்ணரசு வைத்ததுந் திசைமுகனை
வல்விலங் கிட்டவிதமும்
பயிலுங் கலைக்குமரி மணவாள னகிலம்
படைத்தருளி நின்றவிதமும்
பச்சைப் பசுந்துழாய் மாலைக் கருங்கொண்டல்
பார்த்தவை புரக்கும்விதமும்
கயிலையங் கிரியெம்பி ரானது துடைப்பதுங்
கண்டத்தில் விடமடக்குங்
காரணமு மெந்தைபரி பூரணனெ னும்படி
கலந்தநும லாயொருத்தி
செயலென்று சதுர்வேத முறையிடும் படிவந்த
செல்வநா யகிவருகவே

தேவநா யகிமங்கை மேவுநா யகியெங்கள்
சிவநா யகிவருகவே. (௯)

துருவன்வட கிரிவிட் டிறங்காது தானுந்
துளங்காது சக்ரவாளஞ்
சுழலாது சக்கரம் பிறழாது நாளுடுச்
சுற்றிலிற் றிடுவிந்தையும்
மருவிரியு மென்மலர் கசங்காது முனைகொளுவி
வாளியா கக்கரும்பு
வாங்குசிலை யாகநாண் வண்டாக வொருகாலின்
மதனின்று வெற்றிபெறலுங்
கருவினை யுயிர்க்கின்ற கயலுக்கு நாட்டமுங்
கமடந் தனக்குநித்யங்
கருதுந் தியானமுங் கற்பித்த நின்றிருக்
கண்மலர்க் கருணைபொங்கித்
திருவுளம லாதுவே றிலையென்ன வளர்கின்ற
செல்வநா யகிவருகவே
தேவநா யகிமங்கை மேவுநா யகியெங்கள்
சிவநா யகிவருகவே. (௧௦)

வாரானைப்பருவம் முற்றும்.

---

## அம்புலிப்பருவம்.

மந்தரத் தாற்கடல் கடைந்திடும் பொழுதமுதில்
வந்தனை யெனக்குறித்தோ
மண்ணுலகும் விண்ணுலகு முன்னையே தெய்வமென
வந்திக்கு முறைகுறித்தோ

மங்களேசுரி பிள்ளைத்தமிழ்.

தந்திரத் தாற்கலை தினந்தினம் வளர்ந்துநிறை
தண்மைநா டிக்குறித்தோ
சங்கரி யுனைக்கண்டு வம்மென் றழைக்கநீ
தான்பெற்ற பேறுவிட்டே
யந்திரப் பொறிகுயவன் விடுசக்க ரத்திகிரி
யென்னவின் வழிசுழன்றே
யின்னமுமுன் மேற்கறுப் புண்டெனப் பகைகொண்
டிராகுவழி பார்த்திருக்க
அந்தரத் தேதிரிவ தென்னபே தைமையிவளொ
டம்புலீ யாட வாவே
அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாட வாவே. (க)

புதிதான வண்ணமே கலையுடையை நீயிவள்
புனைந்தமே கலையு டையவள்
பூரணவி லாசமாய் மேவுவா யிவளுமே
பூரணவி லாச மாவாள்
சதிரான பரவைவந் தாய்மங்கை யும்பரவை
தான்மகிழ்ந் திடவுவந்தாள்
சங்கர னிடக்கண்வைத் தானுன்னை யிவளையுஞ்
சங்கர னிடக்கண் வைத்தான்
மதனுனை செல்லுகைக் குடையதா யினையிவளு
மதனானை செல்ல வுடையாள்
வானிடத் தேவளர்ந் தாயிவள் பிறந்துமிம
வானிடத் தேவளர்ந்தாள்
அதனு லுனக்குமிவ ளுக்குமொரு பேதமிலை
யம்புலீ யாட வாவே
அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாட வாவே. (உ)

## அம்புலிப்பருவம்.

மீனையொரு கண்படைத் தேயிருந் தாயிவளு
    மீனையிரு கண்படைத்தாள்
  வெய்யவற் குபகாரி யாயிருந் தாயிவள்
    விவேகிகட் குபகாரிகாண்
பானிறக் கலையிலொரு பதினு றுனக்குண்டு
    பலகலை யிவட்குண்டுகாண்
  பதினைந்து நாளையிற் பதைபதைப் பாயிவள்
    பதைப்பதொரு நாளுமறியாள்
வானவரை யேயிகழ்ந் தோடுகின் றுயிவளும்
    வானவரை யாதரித்தாள்
  மானையுன் பால்வளர்த் தாய்குமர னென்றபெரு
    மானையும் வளர்த்துமற்றோர்
ஆனையும் வளர்த்தன ளுனக்கதிக மாதலா
    லம்புலீ யாட வாவே
  அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
    னம்புலீ யாட வாவே. (க)

மாஞர் களங்கமுன் மேல்வைத்த தந்தீரு
    மருவுகுரு பத்தினியினுல்
  வந்தசா பந்தீரு மாபாத கந்தீரும்
    வளருங் குபேரனுவாய்
மீனுறு மேனிபரி மளம்வீசு நாட்குநாள்
    மெலிகின்ற குறைதீருமே
  வெள்ளைமதி யோசிறிய பிள்ளைமதி கொண்டலோ
    வீணே திரிந்துவிட்டாய்
தேனூர் மலர்க்குழலி திருமேனி படலுங்நின்
    சிறுமையெல் லாந்தீருமே
  சிறுமைதீ ரா்தெனது வறுமைபோ காதென்று
    சிந்தையி னினைப்புவைப்பாய்

ஆறினு முன்னுடைய கூறினி லுந்திரு
மம்புலீ யாட வாவே
அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாட வாவே. (௪)

வாரிடம் புகுமுலை சுமந்தபெண் பிளைமங்க
ளேசுரி வருந்தியுனையே
வாவென் றழைக்கநீ வந்துவிளை யாடுவது.
மார்க்கமிது தப்பிவேலை
நீரிடம் புகினுமலை வாயிடம் புகினுநெட்
டிலைவே னெருப்பைமூட்டு
நீயென்று மகனுக்கு வாய்மலர் திறந்திடுவ
னிருமலக் கடவுள்முடிமேற்
றாரிடம் புகின்முன்ன மேகங்கை மேல்வைத்த
சக்களமை யான பகையுஞ்
சடைமே லொளித்தவன் பகையுநின் பகையுந்
தகர்ந்திட வுதைப்ப ளினிமற்
றாரிடம் புகினுமொரு தண்டம் பெறப்படுதி
யம்புலீ யாட வாவே
யகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாட வாவே. (௫)

பெருமருந் துடனே கடைந்திடுங் கடலிற்
பிறந்தனை யிதன்றியுந்தான்
பேழ்வாய் விரிக்கின்ற பாம்பின்விட மொழுகும்
பெருக்கினை யமிர்தமாக்கித்
தருமருந் தேயுன் னுடம்பெங்கு மாகவே
தானே படைத்திருந்துஞ்
சயமாக நீகொண்ட பிணியிலென் னளவுந்
தணிந்ததுண் டோபின்னுமே

## அம்புலிப்பருவம்.

யொருமருந் துண்டெனவு மேருவை வலஞ்சுற்றி
யோடுகின் றாய்சுழன்று
யோசோவி தென்னபே தைமையுனக் கிப்படியிவ்
வுலகெலாஞ் சுற்றிவந்தும்
அருமருந் திவளென் றுணர்ந்திலைகொ லாமிவளொ
டம்புலீ யாட வாவே
யகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாட வாவே. (சு)

வீழியின் மலர்ந்தகனி வாயிதழ் திறந்துசபை
மேலழுது நின்றமயிலை
மேலணி பசுங்கலைகை யாலுரிவ னென்றுரியும்
வீரன்முதல் வஞ்சகரைவெல்
வாளின்முனை கொண்டுழுது சோரிநிண மும்பெருக
வாரியுண வெங்கழுகுபேய்
வாய்கதறி யுஞ்சகுனி யோடவொரு கங்கைமகன்
மாறிமுனை யோடவுடனே
யூழியன லோடெதிர் துரோணனுமுன் றோடமக
னோடுதுரி யோதனனுமே
யோட்டிவ னோடிளைஞ ரோடவினி யோடாதை
யோடாதை யென்றவர்கள்மேல்
ஆழியந் தேர்கடவு நாரணன் றங்கையுட
னம்புலீ யாட வாவே
அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாட வாவே. (எ)

கானந் தருங்குழற் கட்டழகு மதுரங்
கனிந்தசெவ் வாயினழகும்
கஸ்தூரி நாமமும் வித்தார நடையுமே
கலையோ டொசிந்தவிடையும்

ஞானந் தரும்பதமு மழியாத மங்கலிய
நாண்வளர் பசுங் கழுத்தும்
நயனபங் கயமுமெம் பெருமாட்டி பேரழகு
நாடியே புளக மாடி
வானந் ததும்பியொரு கங்கா நதிப்புனலில்
வழிந்தோடு கின்றதென்ன
மனமே நெகிழ்ந்துருகி யன்புகரை பிறழவே
மதியேயு னிருகண் வழியே
ஆனந்த சலதிநின் றுடவே மங்கையுட
னம்புலீ யாடவாவே
அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாடவாவே. (அ)

பொருணயந் திகழ்மறையின் முடிவுகண் டறிவிலுயர்
புலமைகொண் டெருமுனிவோர்
புகழநின் றிமயமலை யருமருந் தெனவும்வளர்
புதியசிந் தூரதிலகமான்
தருணமென் றிரவுபக லடிதொழுந் தொறுமடியர்
தமதுவஞ் சகவினையின்வே
தனையகன் றிடவுதவி தருசுமங் கலிமவுனி
சமயமெங் கணுமுலவியே
கருணைபொங் கியநயனி விசயமங் களகுமரி
கவுரியம் பிகைமகிடரர்
கனகபந் தனமகுட முடிபிதிர்ந் திடநடன
கவனமுந் தியபவுரிசேர்
அருணபங் கயகிரண சரணமங் களமயிலொ
டம்புலீ யாட வாவே
அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
னம்புலீ யாட வாவே. (கூ)

கூரணி பசுங்குழ லிரந்தரி துரந்தரி
 கதம்பவன சாம்ப விபரா
 கந்தரு சுகந்தமக ரந்தநிறை கொந்தள
 கதம்பமணி கும்ப முலையாள்
நாரணி திகம்பரி பரம்பரி சிதம்பரி
 நடம்புரியு மம்பிகையினால்
 நஞ்சுறு பெரும்பகை தணிந்திடுவை யின்பமு
 நலங்களு மடைந்திடுவைகாண்
பேரணி யிலங்கைவரு தேரணி நெருங்கவெகு
 பேயணி நடம்புரியவே
 பிண்டுவிழ மண்டுதச கண்டன்முடி விண்டுடல்
 பிரண்டுவிழ மண்டியடல்கூர்
ஆரண னகண்டபரி பூரணன் றங்கையுட
 னம்புலீ யாடவாவே
 அகமகிழ வல்லிமலர் மகிழவன வல்லியுட
 னம்புலீ யாடவாவே. (௧௦)

அம்புலிப்பருவம் முற்றும்.

---

## அம்மானைப்பருவம்.

பவளமணி யிற்செய்த பந்தொன்று மரகதப்
 பந்தொன்று வச்சிரத்தின்
 பருமணி தனிற்செய்த பந்தொன்று நீலம்
 பதித்திடும் பந்தியொன்று
தவளமணி யிற்செய்த பந்தொன்று கோமே
 தகத்திற்செய் பந்தி லொன்றுந்

தமனியப் பந்தொன்று வைரேரி யத்திற்
சமைத்திடும் பந்திலொன்று
மெவளெடுத் தெறிவதிவை யெவனெடுத் தெறிவதென
இசலியொரு வர்க்கொருவரே
யெதிர்நடந் தமிர்தநில வலர்மடந் தையர்பலரு
மிருகைகொண் டிடவாங்கியே
அவளவ ளெடுத்தெறிய வெதிர்சென்று நீபிடித்
தம்மானை யாடியருளே
யதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடியருளே. (க)

புவனபதி ரண்டகோ ளகைகிழிய விண்கங்கை
பொங்கலை யுடைந்து பாயப்
பொன்மணிப் பந்தெடுத் தம்மைநீ யெறியவும்
பொற்கொடி கலைக்கொடிமருண்
டெவரிது பிடிப்பதினி யெவரிது பிடிப்பதென
இருவர்திரு கித்திருகியே
யேங்கிநின் றேயவர்கள் பின்வாங்கி யோடவே
யெம்பிராட் டியைமதித்துச்
சிவனொருவன் மதிமுடி யசைத்துவெண் ணகைநிலாச்
செய்துமுன் னேபிடிக்கச்
சென்றோட லும்பந்து கொண்டோட லுங்கண்டு
செந்தாம ரைக்கண் முகில்போல்
அவனுமறு முகனுமறு முகனும்பி டித்தெறிய
அம்மானை யாடி யருளே
யதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடி யருளே. (உ)

தம்மாலி யன்றபடி மும்மாரி யென்றுமலர்
தன்மாரி பொன்மாரியுஞ்

## அம்மானைப்பருவம்.

சவ்வா துடன்புழுகு நன்மாரி யும்புலவர்
சல்லாப மென்றுசொரியச்
செம்மாலை யுஞ்சொருகு பொன்மாலை யுஞ்சருகை
செவ்வே புரண்டாடவே
செவ்வா னிலும்பவள மொவ்வா தெனும்படிசொல்
செவ்வாய் மலர்ந்தாடவே
யெம்மாத ருந்துதிசெய் பொன்மானு டன்கலைசொ
லிம்மானும் வந்தாடவே
யெம்மானு நின்றெருகை யம்மானு நின்றுட
இம்மாநி லஞ்சொல்குகவேள்
அம்மாவெ னம்மாநீ சும்மா வெடுத்திருகை
யம்மானை யாடியருளே
யதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடி யருளே. (௧)

கடியுண்ட மதுரப் பசுந்தேன் குடித்துக்
களித்துக் குமட்டியெதிர்வாய்
கக்குஞ் சுரும்படை கிடக்கின்ற செச்சைமேற்
கடைவாய் பிதுங்கிழியும்
படியுண்டு தேக்கிமுத் தமிழ்மாரி பெய்யவும்
பாகசா தனனுமற்றைப்
பங்கயா சனனுமலர் மங்கைமா ரணிதரு
பசும்பொனணி வாழ்விக்கவுந்
துடியுண்ட சூரனுங் கிரவுஞ்ச மேருவுந்
தூளிபட வேலெழுப்புஞ்
சுந்தரர்க் கமுதூட்டு கொங்கையைச் சரியென்று
தூடணிக் கின்றபாவம்
அடியுண்டு விழுவதா மெத்தநன் றென்னவே
யம்மானை யாடி யருளே

யதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடி யருளே. (ச)

கோயில்வெண் கமலப் பிராட்டியிரு பந்தினொடு
கூடவொரு பந்தாடவுங்
கோகனக நங்கைமூ விதமான பந்தினொடு
கூட்டியொரு பந்தாடவுஞ்
சேயிரு விசும்புவளர் கற்பகா டவிநிழற்
றெய்வக் குலத்தில் வாழுஞ்
செல்வக் கொழுந்தனைய மாதரெல் லாருமிரு
செம்மணிப்பந் தாடவும்
மாயிரு நிலத்தில்வளர் மங்கையர்க ளொவ்வொரு
மணிப்பந்து தானாடவு
மங்கையர்க் கரசிநீ யொருகையொரு கைக்குதவ
வாரிவா ரிப்பிடித்தொர்
ஆயிரம் பந்தெடுத் ததிசயப் பெண்பிள்ளா
யம்மானை யாடி யருளே
அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடி யருளே. (ரு)

புவனபகி ரண்டமு மிராசசந் திரனும்
புரந்தரனு மிமையா விழிப்
புலவரு முனித்தலைவ ருமபிரம நிஷ்டரும்
புண்ணி யத்தொடு பாவமுந்
தவனனங் கியும்வாயும் வருணனுந் துருவனுந்
சதுர்வேத முப்பிரமனுஞ்
சங்காழி மாயனும் பொங்காழி யுஞ்சகல
சாத்திரமு மிரவுபகலு
மெவனசைய வசையுமொரு நாளுமசை யாதுபின்
னெடுத்தெவ னடத்துகற்பான்

## அம்மானைப்பருவம்.

எள்ளுமெண் ணெயுமெனத் தநுகரண போகமா
    யெல்லாநின் முக்கண் முதல்வன்
அவனசைய அசையுமென் றுணர்வார்கள் தெய்வமே
    யம்மானை யாடியருளே
  அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
    யம்மானை யாடியருளே. (சு)

பழகுதிரு வடியார் மனங்கசிந் தூறிப்
    பழுத்தபே ரன்பொழுகவும்
  பார்த்துருகு மங்கையர்கள் கண்வழியி லாநந்த
    பாஷ்பசல மேயொழுகவும்
குழல்சொருகு செவ்வந்தி மாலைவண் டூதிக்
    குடைந்தசெந் தேனொழுகவும்
  கொஞ்சுசிறு பிள்ளையெனு மாதர்பே தைமைகண்டு
    குறுநகை நிலாவொழுகவும்
நிழலொழுகு மம்மானை விசைகண்டு முன்னேறி
    நின்றவ ரெலாமொழுகவும்
  நீட்டுங்கை நீட்டுமு னெடுத்தெறியு மெந்தைக்கு
    நெற்றிதனில் வெயர்வொழுகவும்
அழகொழுகு திருமேனி புழுகொழுக வுங்குமரி
    யம்மானை யாடி யருளே
  அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
    யம்மானை யாடியருளே. (எ)

நாயக னெதிர்த்தெதிர்த் தேயோட்டி யோட்டியிரு
    நாலுகை யாற்பிடிக்க
  நன்மணிப் பந்திலொரு பொன்மணிப் பந்தூடு
    வேறியே மார்புதைத்துத்
தூயவன் மலர்க்கரந் தப்பியொரு செஞ்சடைச்
    சுருள்கண்ட காடுழக்கித்

துண்ணெனப் பானிலாக் கூனிமிர்ந் தோடவே
தூற்றுதண் ணமிர்தமழையால்
தீயென மூளத்திடு நுதற்கண் குளிர்ந்திடத்
திருகுதொடை தட்டிமாரன்
சிலைவளைத் தாடரதி கலைவளைத் தாடவுந்
திரையெடுத் தாடியாடி
ஆயிர முகக்கங்கை யமுனையொடு கலந்தாட
அம்மானை யாடியருளே
அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
அம்மானை யாடியருளே. (அ)

திருமணிச் சிந்துரத் திலதமிடு நெற்றியுந்
தேன்பில்கு பவளவாயும்
திருவொட்டி யாணமுங் கொஞ்சிமுத் தாடியொரு
செங்கைமேல் வைத்தகிளியும்
குருமணிப் பந்திநிரை மேகலையும் வச்சிரக்
கொப்புமூக் குத்திமுத்துங்
குறுநகையு மங்களேஸ் வரியுன்ற னழகும்வெகு
கோடிசூ ரியரென்னவே
பருமணிப் பந்திலிது பதுமராகப் பந்து
பாய்ந்திடில் வருத்துமெனவே
பச்சைவயி டூரியப் பந்துகோ மேதகப்
பந்தினி லுனக்கிணங்கும்
அருமணிப் பந்தெடுத் தரசிளம் பெண்பிள்ளை
யம்மானை யாடி யருளே
அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடி யருளே. (கூ)

தூயதும் புருவீணை நாரதனு மணிமுடி
தாளக்காம லிசைமுழக்கச்

# அம்மானைப்பருவம்.

சுழல்கின்ற பஞ்சாயு தப்படை யெமக்கொர்பகை
  சொல்லென்று காத்திருப்பச்
சேயிருந் திசைமுகக் கடவுள்பக் கத்திலே
  சேவித்து நிற்கவுங்கந்
திருவர்பா டவுமங்கை யொருதிமார் பொருதியிரு
  சேவடிகை யால்வருடவும்
பாயிருந் திரையெடுத் தெறிகின்ற பாற்கடற்
  பள்ளிமே லண்டபிண்ட
பகிரண்ட முந்தழைத் துந்தியந் தாமரை
  படர்ந்திட விரும்பியொருபாம்
பாயிரந் தலையிலொரு தலைவைத்த வன்றங்கை
  யம்மானை யாடியருளே
அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
  யம்மானை யாடியருளே. (௧0)

செஞ்சொல்வளர் புகலூரி லந்தணர் குலத்திலச்
  சிராக்கியம் பெருமுகுந்தன்
செல்வியாய்ப் பொன்னேந்து பூண்முலை யெனும்பேர்
  திருந்திய பசுங்கிள்ளையாய்க்
கஞ்சமுக வணிகனருள் பொன்னுற்ற பூண்முலைக்
  கன்னியாய் மேழிகட்டும்
கங்கா குலத்திலொரு பூணாரும் வனமுலைக்
  காரிகையு மாகிமிக்க
பஞ்சின்மெல் லடிகொண்ட திரைசேர் மடந்தையம்
  பாவையாய் வந்தவுலகம்
பதினாலை யுப்பெற்ற மங்களே சுரிபரா
  சத்தியா யிந்தவகையாய்
அஞ்சுவடி வாகியெங் கோனொடு மிருந்தமயி
  லம்மானை யாடியருளே

அதிருநான் மறைசொல்லும் வதரிகா வனவல்லி
யம்மானை யாடியருளே. (கஎ

அம்மானைப்பருவம் முற்றும்.

---

## நீராடற்பருவம். —௧௨௯

தெண்டிரை கொழிக்கின்ற கங்கைகா விரிபொருனை
சிந்துகா ளிந்திநதிசந்
திரபாகை துங்கபத் திரையமுனை சரசுவதி
தெய்வநதி பம்பைநிரைவாய்
கொண்டிரையு மன்னைகையச் சுதைதாம்ப்ர வர்ணிவெண்
கோமதிப்ர யாகைபொங்கிக்
குங்குமங் கோட்டமில வங்கமே லத்தினொடு
சொழுமிச் சுழன்றுசுலவ
வண்டிரை மலர்த்தாதும் வெணமுத்த முஞ்சூல்
வலம்புரிச் சங்கமுந்தா
மரைமுத்தும் வருணன் குலத்தேவி மார்பணியு
மஞ்சளையு மள்ளியள்ளி
வெண்டிரைகொழித்தெறியும் வைகைப்பெருந்துறையில்
வெள்ளநீ ராடியருளே
விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணர சிளங்குமரி
வெள்ளநீ ராடியருளே. (க)

வள்ளான்மை பூண்டமந் திரியாகி யேயென்
வசப்பட்ட பொருளையெல்லாம்
வாங்குவித் தாய்பரிக் கேங்கவைத் தாய்வம்பு
மார்க்கம் புரிந்துநின்ற

கள்ளா நரித்திரள் பரித்திர ளெனச்செய்த
　　கதையென்கொ லென்றழுதி
　கண்மலர் சிவந்திடவும் வாதவூர் முனிவன்
　　கலங்கித் தமிழ்ப்பாடவும்
தள்ளாது தொண்டர்க்கொர் கைம்மாறு செய்யவே
　　தருநமக் கென்றெழுந்தே
　தாறுமா றேசெய்த பாண்டியன் கைம்மாறு
　　தான்படச் சைவமதமா
வெள்ளானை யடிபட்ட வைகைப் பெருந்துறையில்
　　வெள்ளநீ ராடியருளே
　விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணர சிளங்குமரி
　　வெள்ளநீ ராடியருளே. (௨)

மானையுண் ணுமெதி கிழிபடக் குதிகொண்டு
　　மழைநீரை யுங்கிழித்து
　மதவானை மலையருவி யொடுகீ ழிறங்கிமுன்
　　வளைத்தலை வைத்திடுங்கூன்
பானையுண் ணுடிக் குதிக்கத் ததும்பிவழி
　　பாலருவி பசுமடுப்பால்
　பாற்கட லெனப்பொங்க விளையாடு மங்கையம்
　　பதியெம் பிராட்டியுன்னைத்
தேனையுண் ணுருங் கருங்குழற் பாவைத்
　　திருக்குலப் பெண்கள்பூசுந்
　தெய்வக் கதம்பகஸ் தூரிகற் பூரச்
　　செழுஞ் சேற்றில் வெறியெடுத்த
மீனையுண் ணுதுகொக் கினமருளும் வைகைதனில்
　　வெள்ளநீ ராடியருளே
　விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணர சிளங்கவுரி
　　வெள்ளநீ ராடியருளே. (௩)

சேருந் திருப்பவள வாயினை விருந்தென்று
செம்பவள மெதிர்கொள்ளவுஞ்
செம்பொன்மணி வளையிட்ட கையினை விருந்தென்று
செங்காந்த ளெதிர்கொள்ளவுஞ்
சாருந் தனத்தினைச் சக்ரவா ஹத்தினொடு
தாமரைக ளெதிர்கொள்ளவுஞ்
சந்த்ரபூ ஷணியுன் கழுத்தினை வலம்புரிச்
சங்கமே யெதிர்கொள்ளவுங்
காருந்தி செவ்வரிக் கண்களைக் கண்டுசெங்
கயலெலா மெதிர்கொள்ளவுங்
கட்டழகி யுன்கருங் குழலையுங் குழலின்மேற்
கட்டித் தொடுத்தவெட்டி
வேருங் கொழுந்தையுஞ் சைவலம தெதிர்கொள்ள
வெள்ளநீ ராடியருளே
விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணரசிளங்குமரி
வெள்ளநீ ராடியருளே. (௬)

மருந்துண்டு பண்ணிவிண் ணவர்கடல் கடைந்துண்ட
மார்க்கத்தை யேநினைந்து
மற்றவர்க் குரியபெண் களுமே கடைந்துண்ண
வந்ததே போலமதியைப்
பொருந்துண்ட மேவும் புலோமசை கலைக்குமரி
பொற்கொடி யரம்பையரெலாம்
புடைசூழ முகில்வண்ண னீயாகை யால்வடம்
பூட்டுமந் தரமுழக்க
இருந்துண்ட நீரமுத மாச்சுதென் றேபுலவர்
இன்னமுந் தான்சொல்லவே
இளநுதற் பிறையினொடு திருவாய் முளைக்கமுன்
னேற்றிவைத் தேதேவர்முன்

## நீராடற்பருவம்.

விருந்துண்ட பாற்கடலும் வைகையுஞ் சரியென்ன
வெள்ளநீ ராடியருளே
விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணர சிளங்குமரி
வெள்ளநீ ராடியருளே. (ரு)

பூரகந் தான்விளைய ரேசகங் கும்பகம்
பூட்டியொரு தாரணையினூற்
பொங்கியெழு மூலவெங் கனலினைக் கொளுவியே
புதுமதிப் பால்வடித்துத்
தாரகந் தானென்ன வுண்டுபல கற்பந்
தழைத்திடு புசண்டமுனிவன்
சவனன் பதஞ்சலி வசிட்டன் புலத்தியன்
சந்தான வாழ்வு பெற்றோன்
பாரசங் காரியச் சுதன்மலைக் கும்பன்
பராசரன் வியாசன் வேதன்
பார்த்துருக நாற்பத்து முக்கோண வீட்டிற்
பதிக்கின்ற விந்துநாதம்
வீரசிங் காசனத் தரசிளம் பெண்பிள்ளை
வெள்ளநீ ராடியருளே
விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணர சிளங்குமரி
வெள்ளநீ ராடியருளே. (சு)

இசையுஞ் சிவக்கொழுந் தென்பதூ தவக்கொழுந்
தென்பதா லேநிறுத்தி
இமையாத விழிகொண்டு தரிசிக்கு மார்க்கண்ட
னென்றைக்கு மழியாதுதான்
வசையஞ்ச வாழ்ந்திட வரந்தந்த மங்கைநகர்
மதுரைநக ராகுமென்றே
மருவியொரு மும்முலை சுமந்திடை வருந்தியே
வளர்கின்ற காலையிற்கீழ்த்

திசையஞ்ச வென்றுவரு ணனைவென்று நிருதியைத்
    தென்னலகை யானைவென்று
  சீறிவரு நந்திகண நாதரை யெலாம்வென்று
    சிவனையும் பொருதுதிக்கு
விசையஞ் செலுத்துபர்ப் பதராஜ ராஜன்மகள்
    வெள்ளநீ ராடியருளே
  விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணர சிளங்குமரி
    வெள்ளநீ ராடியருளே. (எ

எடுபால னுகவனு வளவான கருவினி
    லெழுந்தே திரண்டவடிவாய்
  இன்னமொரு பிறவியை யெடுக்கவுங் கன்னியர்கள் -
    ஏந்திமுத் தாடியவர்தங்
கெடுபால் கொடுக்குமுன் திருமுலைப் பால்தந்து
    கிருபையன் பால்வளர்ப்பாய்
  கிரணசந் திரவதன விமையமங் களமவுன
    கெவுரிதிரு மங்கைபாலே
அடுபாலு மோட்டெருமை மடுவரால் பாயவே
    யடுவ்ாலு மின்றிலப்பா
  லரசுபுரி பழையதிரு வடியார் குழாம்பரமன்
    அழகுள்ள திருமேனிமேல்
விடுபாலு மலையெறிந் தேபெருகும் வைகைதனில்
    வெள்ளநீ ராடியருளே
  விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணர சிளங்குமரி
    வெள்ளநீ ராடியருளே. (அ)

எத்திலே விளைகின்ற சநுகரண போகத்
    தியக்கமு மயக்கமுந்தான்
  என்றைக்கு மெய்யிதென வொன்றைக் குறித்திடா
    தின்பமில் லாதபேய்ச்சம்

## நீராடற்பருவம்.

பத்திலே மதிகொளுவி விழியாமலேநின்ற
பழையதிரு வடியார்பெறும்
பாக்கியங் கண்டுமெதி யேக்கமுற் றேபெரிது
பாக்கியம் பெறமதித்தே
சித்திலா தில்லையிச் சகமுழுது மிவளுடைய
செயலிலா தில்லையிந்தத்
தேவரெல் லாருமுச் செயலுமென் றரிபிரம
தேவருணர் துரியமுடிவில்
வித்திலா விளைவாய் விளைந்தசிவ போகமே
வெள்ளநீ ராடியருளே
விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணரசிளங்குமரி
வெள்ளநீ ராடியருளே. (க)

பண்ணுறு குதலையங் கிண்கிணிச் செங்காற்
பசுங்கொடிச் செங்கைவேடப்
பாவையர் மணிச்சிற்றில் வாரியவ ரூசற்
பருங்கமுகி னைப்பெயர்த்திட்
டெண்ணுறு மேலமில வங்கமிலு மிச்சோ
டுயர்ந்தகொளு மிச்சுநாவல்
உள்ளதெல் லாங்கொள்ளை யிட்டுமேலை வளமெலா
முண்டெடுத் துத்திரட்டிக்
கண்ணுறு பூங்குழ லரம்பையர் நடக்கும்வழி
கண்டுகண் டேதெளிந்து
கற்பகா டவிவழி செலத்தோணி யாகக்
கடாவிய விமானமெல்லாம்
விண்ணுறுறு துங்கவரும் வைகைப் பெருந்துறையில
வெள்ளநீ ராடியருளே

விண்ணவர் தொழுங்கவுரி பெண்ணரசிளங்குமரி
வெள்ளநீ ராடியருளே.

நீராடற்பருவம் முற்றும்.

## பொன்னூசற்பருவம்.

நாட்டுபவ ளக்கொழுங் கால்முடி பொறுத்திடவு
நரசிங்க முகம்வகுத்த
நவமணிப் பொதிகையின் முழுநீல விட்டமது
நடுவே கிடத்திமுற்றும்
நீட்டப் பசுந்தமணி யத்தகடு தளதளென
நிரைமணி பதித்திலங்கு
நேமிவட் டப்பலகை சதிரச்சு வயிரத்தில்
நெடியதவ ளைக்குறங்கு
மாட்டிவெண் டரளவட மேறிட்டு நால்வகை
மலர்த்தள நிரப்பிமிக்க
மாணிக்க மொழுகுகிர ணச்சுளிகை மெத்தைநடு
வைத்தெங்கு மாலையாகப்
பூட்டியிந் திரவிமா னம்போல வேசெய்த
பொன்னூச லாடியருளே
பொன்னேறு முலைமங்கை முன்னைக வருமங்கை
பொன்னூச லாடியருளே. (க)

பேச்சுக்கு மனதுக்கு மெட்டாத வெண்ணிலாப்
பிறைமுடித் தருளுமெங்கோன்
பிரமனை முகங்கொண்டு நோக்கியொரு பொன்னூசல்

பெண்மணிக் குதவென்னவும்
வாய்ச்சுக் கதிக்கின்ற கயிலாச மும்பெரிய
வடமேரு வுங்கால்களாய்
மந்தரம் பெருவிட்ட மாகவுந் திசையெட்டில்
வளரட்ட மாநாகமே
பாய்ச்சிக் சுழற்றரி தெனக்கட்டு கயிறதாய்ப்
பருமணி வடஞ்சுருதியாய்ப்
பலநூலு மாகவுப நிடதத் தனிப்பொருட்
பாயல்மேல் மெத்தையாகப்
பூச்சக்ர வாளமொரு பலகையா கச்செய்த
பொன்னூச லாடியருளே
பொன்னேறு முலைமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே. (உ)

தேகமே யுங்கள்பொன் னிலயம தாகச்
சிறக்குந் தலைத்தினிற்கால்
செங்கொழுங் காலாய் நிறுத்தியிரு கைகளாய்த்
திருத்துமணி விட்டமேத்தி
ஆகம விசாரணைப் பெருவாச்சி கொண்டுமுரு
டாஞ்சுவக் கணுவையெற்றி
யறியாமை யென்னவளர் கோணலை நிமிர்த்திட்
டரும்பலகை நெஞ்சமாக்கி
வாகுபெற வுபயசர மணிவடம் பூட்டியொரு
மவுனபீ டிகைதிருத்தி
வலமிடம் பிசகாது சுழுமுனை முறுக்காணி
மாட்டிச் சுகானந்தவை
போகசய னத்தின்மல ரிதழ்பல விரித்திட்ட
பொன்னூச லாடியருளே

பொன்னேறு முலைமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே.

முன்னை விடத்தினிற் பாற்கட லுறங்கிய
முகுந்தனுந் திசைமுகத்தின்
முதல்வனுந் தேடியுங் காணாத வடிவாய்
முளைத்தவன் விளங்கிமகிமை
தன்னால் வளர்ந்தசோ ணாசலந் தில்லைகுற்
றாலந் துவாதசாந்த
தலமான மதுரைகா ளத்திரா மேசுரந்
தானென்ன வேதமெல்லாம்
பன்னாலை யத்தினும் பலவாலை யத்தினும்
பஞ்சபூ தத்தினுக்கும்
பண்டுற் றெழும்பியொரு காலத்து மழியாத
பரமதல மென்றுமங்கை!
பொன்னா லயத்திலெங் கோனொடு மிருந்தமயில்
பொன்னூச லாடியருளே
பொன்னேறு முலைமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே.

முன்வீடு வெட்டவெளி யாயினு தெனக்கண்டு
முக்கணன் முகுந்தன் மலரோன்
மூவடி யெடுத்தவெங் கோன்பவள மேனியில்
முளைத்துநீ வளர்பிருக்கும்
பின்வீடு கடலுமலை யுஞ்செய்முட் டாழ்வீடு
பெருவீடி தெனவிசழ்ந்தே
பிரணவச் சுழுமுனையில் விந்துவழி நாதம்
பிறக்கின்ற மூலவீடே
என்வீடு தானன்றி மற்றுமொரு வீடில்லை
யென்றே கருத்திரங்கி

## பொன்னூசற்பருவம்.

இவையான மூலமணி பூரக முதற்கொண்
டிலங்கியென் னிதயகமலப்
பொன்வீடு குடிகொண்ட மங்களே சுரவல்லி
பொன்னூச லாடியருளே
பொன்னேறு முலைமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே. (ரு)

வாரித் தரங்கமெறி குமிழியுங் கொம்பானை
மத்தசமு மணிதிருத்து
மந்தரா சலமுமிள நீரிற் குரும்பையு
மருக்குலிக வண்ணமெழுதி
சாரித்த செப்புநவ ரத்நமணி மகுடமுந்
தாளமுஞ் சொர்ணகுடமுந்
தாமரை யரும்பினொடு கோங்கரும் புந்துணைச்
சக்ரவா ளப்பட்சியும்
பாரித்த பந்துமே சூதினொடு வந்துசமர்
பண்ணிலும் பண்ணுமென்னப்
பகைசெலுத் தாதவகை வகைவகைய தாய்நின்ற
பண்பிலே வளமுகந்து
பூரித்த கும்பமுலை மங்களே சுரவல்லி
பொன்னூச லாடியருளே
பொன்னேறு முலைமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே. (சு)

எவனசைவி லாதமர மேழுந் தொளைத்துவகை
எவனசைவி லாதழுந்தான்
எவனசைவி லாதமுடி ராவணனை வென்றிலங்
காபுரிக் கரசு வைத்தான்
அவனசைய மேருகிரி துருவனசை யத்துருவ
னணிசக்க ரத்தினுடனே

## மங்களேசுரி பிள்ளைத்தமிழ்.

ஆதவ னிலாமதி நவக்கிரக பந்திகளை
யாதிதிதி யோகமசையச்
சிவனசைய வொருகைமழு வொருகைமா னசைய
திருநடன மேயசையவுஞ்
சிவகாம வல்லிநீ யசைகின்ற பொழுதிலுன்
றிருவுந்தி தனில்மலர்ந்த
புவனமசை யும்படி யுதைந்தூதைந் தாடியே
பொன்னூச லாடியருளே
பொன்னேறு மூலமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே.

முதுமறைக் கிழவனென வேமுண்ட காசன
முளைத்தகட வுட்பிரமனும்
மூவா முகுந்தனுங் குலிசக்கை நாயகனு
முப்பத்து முக்கோடியென்
பதுமணக் குந்தொகைப் புலவருஞ் சித்தரும்
பாக்கிய நமக்கிதென்னப்
பார்த்துருக வுஞ்சித்தி ரைத்திங்க ளென்னப்
பதித்திடு மணச்சடங்கிற்
றுதிமணக் கின்றநின் பதமம்மி மேலெந்தை
தூக்கிவைத் தூச்சிவந்த
தொழில்கண்டு பின்னுருக நீயுமவர் கையினாற்
றூக்கிய தொழிற்குருகவும்
புதுமணக் கோலமது கொண்டசுந் தரவல்லி
பொன்னூச லாடியருளே
பொன்னேறு மூலமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே. (அ)

நாரணன் பிரமன்வரு ணன்குபே ரன்பிரம
நாட்டத்தர் பருதிமதிகின்

## பொன்னூசற்பருவம்.

னரர்சித்தர் விஞ்சைய ரியக்கர்கந் தருவரிவர்
நாயக னெனச்சொல்வெள்ளை
வாரணன் முதற்பல வுயிர்த்தொகுதி யாய்ப்பஞ்ச
வானபூ தாதிவிளைவாய்
வாசா மகேச்சுர கிரீசபிர காசமன
வாசபர மேசவிசுவ
காரண நிராலம்ப நிர்க்குண விதேகநிட்
காமிய பரப்பிரமசிற்
கனதொந்த வற்சித சுகாதீத சாயுச்ய
கர்த்தவ்ய நித்தமுத்த
பூரண னொருத்தனொடு பிரியாத பெண்பிள்ளை
பொன்னூச லாடியருளே
பொன்னேறு முலைமங்கை முன்னாக வருமங்கை
பொன்னூச லாடியருளே. (க)

மன்னையலர் முகமுந் திரும்புந் திசைக்கெலாம்
வைத்தகிரு பைப்பார்வையும்
வடிகொண்ட உத்தூள விபூதியணி கோலமு
மருங்குபட் டாடையினையுங்
கன்னமஞ் சளையுமழி யாதமங் கலியக்
கழுத்துமுத் தாபரணமுங்
கையின்மேல் வைத்திடு கிளிப்பிள்ளை கொஞ்சக்
கனிந்தசெம் பவளவாயும்
பின்னலிடு கொண்டையும் கொண்டைக்கு மேலிட்ட
பிச்சிச் சொருக்கும்வஜ்ரப்
பிறைவட மிசைந்தாடு மிருமுலையு மொப்பிலாப்
பேரழகு தானரும்பிப்

மங்களேசுரி பிள்ளைத்தமிழ்.

பொன்னழகு பூத்தருள் பழுத்தமங் களவல்லி
பொன்னூச லாடியருளே
பொன்னேறு மூலமங்கை முன்னுக வருமங்கை
பொன்னூச லாடியருளே.

பொன்னூசற்பருவம் முற்றும்.

---

திருஉத்தரகோசமங்கை

மங்களேசுரி பிள்ளைத்தமிழ் முற்றும்.

---